


THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

## ஜனவரி 2005

ஆசிரியர்
B.அர்ஜூனன்

மரம் 5 கனி 2

## கிறிஸ்துவின் வசன மாத இதழின் பதினேழாவது

## வாசகர் கருத்தரங்கு

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கிற்கு சென்னை மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களை அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ★ 1992முதல்2004 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

★பதினேழாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு


**நாள் :** ஜனவரி29 - ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி

**இடம் :** கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,1.மண்டபம் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010

மேலும் விபரமறிய
The Word of Christ
954543-2■3278


*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
சகோ . டேனியல்

*வாருங்கள்! பங்குபெறுங்கள்!! அறிந்து கொள்ளுங்கள்!!!*





2 வாசகர்
0 அனைவருக்கும்
0 புத்தாண்டு
5 வாழ்த்துக்கள்



*கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்*
*(ரோமர்16:16)*

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 5 ஜனவரி - 2005 கனி - 2


ஆசிரியருரை

## புதிய வானம் புதிய பூமி
## A new heaven and a new earth



ஒவ்வொரு வருடமும் புதிய ஆண்டு பிறக்கிறது. அதைப்போல ஒவ்வொரு மாதமும், வாரமும், நாட்களும் நமக்கு புதியவைகளாகவே இருக்கின்றன. புதிய வானத்தையும் புதிய பூமியையும் என்றுதான் காணப்போகின்றோம் என்ற ஏக்கம் அநேகருக்கு இருக்கத்தான் செய்கிறது. ஏனென்றால் நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வானம் மற்றும் பூமி அதே தோற்றத்தோடே இருக்கிறது சில சமயங்களில் காலத்திற்கேற்ப சில மாற்றங்களைப் பார்க்கிறோம். இதிலே நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம். நிச்சயமாக நாம் காண்கின்ற இந்த வானமும் பூமியும் ஒரு நாள் அழிந்துபோகும். அதன் பின்பு புதிய வானத்தையும் புதியபூமியையும் நாம் காணலாம். இந்த புதிய வானமும், புதிய பூமியும் எங்கே இருக்கிறது, அங்கே யாரெல்லாம் இருப்பார்கள், அதில் பிரவேசிக்க நாம் என்ன செய்யவேண்டும், என்ற கேள்விகள் நமக்குள் எழுகிறதல்லவா? ஆம், புது வருடத்தில் பிரவேசித்திருக்கிற நாம் இந்த புதிய வானத்தையும், புதிய பூமியையும் பற்றி தெரிந்து கொள்வது மிக அவசியம்.

நாளுக்கு நாள் புதிய புதிய கண்டுபிடிப்புகள் பெருகிக் கொண்டேவருகிறதை நாம் அனுதினமும் காண்கின்றோம் மற்றும் கேள்விப்படுகிறோம். பரிசுத்த வேதாகமம் மோசே காலமுதலே இருந்து வருகிறது. இவ்வேதாகமும் புதியவைகளைப் பற்றி பேசிக்கொண்டே வருகிறது. அதிகமாக வேதாகமத்தை மையமாக வைத்தே புதிய புதிய கண்டுபிடிப்புகள் கூட வாந்திருக்கிறதை ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக்கொள்கின்றனர். குறிப்பாக சொன்னால் "கர்த்தர் ஞானத்தை தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதி.2:6) என்ற வசனத்திற்கேற்ப வேதாகமத்தை ஏற்றுக் கொண்டவர்கள் நாட்டிற்காக ஆராய்ந்து கொடுத்ததை நாம்

எண்ணிக்கையில் சொல்லிவிட முடியாது அந்த அளவுக்கு அதிகமாக கொடுத்துள்ளனர். இவைகளெல்லாம் தேவனால் உண்டாக்கப்பட்ட மனுஷன், மனுஷனுக்காக இப்பூமியில் விட்டுச்சென்றவைகளே. தேவன் மனுஷனுக்காக இந்த வானத்தையும் பூமியையும் சகலவற்றையும் சிருஷ்டித்தார். நாமும் இன்றுவரை இதில் வசித்து வருக்கின்றோம்.

## I. புதிய வானமும் புதிய பூமியும் எங்கே இருக்கிறது?

இதைப்பற்றி தெரிந்து என்ன செய்யப்போகிறோம், பின்னாலே நடப்பதை யார் கண்டது என்ற சலிப்பான கேள்வி அநேகருக்கு எழும்பி, இருக்கிற வாஞ்சையையும் குறைத்துவிடுகிறது. அன்பானவர்களே, வாழ்க்கையில் நம்முடைய வெற்றிக்கு குறுக்கே நிற்பது என்னவென்றால் சோம்பேறித்தனம். இதை முதலில் களைந்து விட்டு எறும்பைப்போல சுறு சுறுப்புள்ளவர்களாய் வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பரிசுத்த வேதம் கூறுகிறது: தேவன் எங்கே இருக்கிறாரோ அங்கே புதிய வானமும் புதிய பூமியும் உண்டு. "அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள்"(வெளி.22:5).

பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதும்போது: "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்"(பிலி.3:20) என்று எழுதுகிறார். ஆம் நம்முடைய நிரந்தரமான குடியிருப்போ இங்கே இல்லை ஏனென்றால் "இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத்தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். அதினிமித்தமே நாம் சரீரத்திலே குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்"(2கொரி.5:7-9). ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பானேயானால் நிச்சயமாக இந்தவிதமான சிந்தை உடையவனாயிருப்பான். ஒருவேளை "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்"(2கொரி.5:1,2).

## II. அங்கே யாரெல்லாம் இருப்பார்கள்?

இன்று கிறிஸ்தவத்தில் கேட்கப்படும் முதல் கேள்வி நீங்கள்

இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா? நல்ல கேள்விதான் ஆனால் வசன ரீதியாக அநேகர் கேட்பதில்லை. இரட்சிப்பு என்பது நம்முடையதல்ல அது தேவனுடையது, அது தேவனுடைய ஈவாகும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான்" (ரோமம.16:16). மேலும் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்"(அப்.2:47). இப்படி இரட்சிக்கப்படுகிறவர்களே அங்கே இருப்பார்கள்.

"பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது"(வெளி.21:1,2). மேலும் "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை"(வெளி.21:24,25). பூமியிலே வசதிபடைத்தவர்கள் வசதியான இடத்தை பிடித்து விடுகின்றனர். பொய் பேசுகிறவர்கள் ஆயிரம் பொய் சொல்லி ஒரு கலியாணத்தை முடித்துவிடுகின்றனர். இப்படிப்பட்டவர்களை நீங்கள் பூமியிலே பார்ப்பீர்கள். ஆனால் பரலோகத்திலே இப்படிப்பட்டவர்களை பார்க்க முடியாது என வேதம் சொல்லுகிறது. "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" (வெளி.21:27). ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்படுவது என்னாலோ, உங்களாலோ, அல்லது உங்கள் சபை போதகராலோ முடியாது. அது கர்த்தராலே மட்டுமே முடியும். ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் புதிய வானமும் புதிய பூமியுமாகிய பரலோகத்தில் இருப்பார்கள்.

## III. அதில் பிரவேசிக்க நாம் என்ன செய்யவேண்டும்?

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்"(யோவா.17:3). தேவனையும், ஆண்டவரையும் அறிகிற அறிவிலே வளர வேண்டும். தேவன் எப்படிப்பட்டவர், அவருடைய திருசித்தம் என்ன? இயேசுவை பலியாக இவ்வுலகத்திற்கு அவர் ஒப்புக்கொடுத்ததின் காரணம் என்ன? போன்ற கேள்விகளுக்கு தனி நபர் பதில் சொல்லிவிட முடியாது. இதற்கு வேதாகமமே பதில். இவைகளை அறிகிற அறிவில் நாம் தேர்ச்சியடையும்போது நித்திய ஜீவனுக்குள்ளாக வழி நடத்தப்படுவோம். மற்றபடி சுயமுயற்சியி

னாலோ அல்லது சுய பக்தியினாலோ நித்திய ஜீவனை சம்பாதித்துக் கொள்ள இயலாது. இன்றைய உலகத்தில் உள்ளவர்கள் மற்றவர்களைவிட தான் ஒருபடி உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என்று நினைத்து போட்டி போட்டுக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். முடிவிலே எல்லாம் மாயையாக போய்விடுகிறது. படித்தவன் பாட்டைக்கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்ற உலகபழமொழிக்கு ஏற்ப நடக்கிறது. ஆனால் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள பணமோ, அழகோ, படிப்போ தேவையில்லை. கர்த்தர் உங்களையும் உங்கள் விசுவாசத்தையும் காண்கிறார். இன்றே விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். "விசவாசத்தினால் வராத யாவும் பாவமே" என (ரோம.14:23) -ல் படிக்கின்றோம்.

ஆகையால் "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவை களையே நாடுங்கள்"(கொலோ3:2). பூமிக்குரியவர்கள் பூமிக்குரியவைகளை நாடுவார்கள். நீங்கள் பரத்துக்குரியவர்கள் என்றால் பரத்துக்குரிய காரியங்களை இப்புத்தாண்டில் பேசுங்கள், நாடுங்கள். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின"(2கொரி.5:17). நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருப்பீர்கள், புதிய பூமியில் பிரவேசிக்கவும் தகுதியுடையவராயிருப்பீர்கள். இல்லை என்றால் இன்றே கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்ள பிரயாசப் படுங்கள். "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகி) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலே.1:13,14). இங்கே அவருக்குள் (இயேசுவுக்குள்) அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

இச்செய்தியை வாசிக்கின்ற எனதருமை சகோதரனே, சகோதரியே, புத்தாண்டில் பிரவேசித்திருக்கிற நீங்கள் புதிய வானத்தையும் புதிய பூமியைம் குறித்து சற்று சிந்திக்கும் படி உங்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். நேரமில்லை என்று ஒதுக்கிவிடாதீர்கள் நேரத்தை நாம் தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சபையோ டும், சகல பரிசுத்தவான்களோடும் சேர்ந்து வேதாகமத்தை ஆய்வு செய்யுங்கள். அதில் பிரவேசிப்பதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள்.

> **"வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்து போவது எளிதாயிருக்கும்" (லூக்.16:17)**

# நாம் எப்படி ஜெபிக்கவேண்டும்?

## How should we pray?

**J.C.Choate**



கிறிஸ்தவர்கள் தங்களுடைய பிதாவாகிய தேவனைக் கிட்டிச்சேர்வதற்கு ஜெபமே வழியாக இருக்கிறது. இதற்கான இன்னொரு வழி, இது நாம் தேவனிடத்தில் பேசுகின்ற முறையாகவும் இருக்கிறது. ஆனால் நாம் அதை எவ்வாறு நடைமுறைப் படுத்துகிறோம்? எவ்வழியில் நாம் நமது சிருஷ்டிகரை கிட்டிச் சேருகிறோம்?

நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் மரியாதை செலுத்தாமல், தாழ்மையில்லாமல், ஆராதிக்கும் ஒரு மனநிலையில்லாமல் எவ்வாறு நுழைகிறோம்? கிறிஸ்து, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்"(யோவா.4:24).

எப்படி ஜெபிக்கவேண்டும் மேலும் எப்படி ஜெபிக்கக் கூடாது என்பதை கிறிஸ்து நமக்குக் கூறுகிறார். அவர் அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்"(மத்.6:5-8) என்றார்.

கர்த்தர் தொடர்ந்து சீஷர்கள் எவ்வாறு ஜெபிக்க வேண்டுமென சொல்கிறார். அவர் மாதிரி ஜெபத்தில் பேசின வார்த்தைகளும் சீஷர்களுக்கு எவ்வாறு ஜெபிக்க வேண்டுமென கற்பித்ததும் கர்த்தருடைய சொந்த ஜெபமாகவே இருக்கின்றது. இருந்தாலும்

இன்றும் தேவனோடு நாம் எப்படி பேச வேண்டும் என நாம் அவற்றின் முக்கியக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். கிறிஸ்து, "நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங் களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத்தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக் கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட் சித்துக் கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென் றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே"(மத்.6:9-13).

ஏன் இந்த ஜெபம் இயேசுவின் நாமத்தில் கேட்கப்பட வில்லை? கிறிஸ்து மனிதனை இரட்சிக்கும்படிக்கு அவனுடைய பாவங்களுக்காக, (அந்த வேளையில்) இன்னும் மரிக்கவில்லை மேலும் நம்முடைய மத்தியஸ்தராக மாறவில்லை. ஆனபடியினால், இன்று நாம் இந்த மாதிரி ஜெபத்தில் இரண்டு மாற்றங்களை உருவாக்குகிறோம். நாம் கர்த்தருடைய ராஜ்யம் வளரவும் பரவவும் ஜெபிக்கிறோம், மேலும் பிதாவை நோக்கி நம்முடைய ஜெபத்தினை இயேசுவின் நாமத்தில் முடிக்கிறோம் (2கொரி.1:2).

ஜெபமானது பிதாவை நோக்கி ஏறெடுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம், முதலாவது, அங்கே தேவனுக்கு மகிமை செலுத்தப்பட்டது. பிறகு சபை அல்லது ராஜ்யத்தைக் குறித்து இயேசு வற்புறுத்திச் சொன்னார், மேலும் சீஷர்களுக்கு அது சீக்கிரமாக வரும்படிக்கு ஜெபிக்க கற்றுக்கொடுக்கின்றார்.

இரண்டாவதாக, அவர் சரீரம் மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங் களுக்காக ஜெபிக்கும் படி கற்றுக்கொடுத்தார்.

இயேசுவின் ஜெபத்தில் மூன்றாவது காரியம், மன்னிப்பைக் குறித்து...... நாம் தேவனுடைய மன்னிப்பைப்பெறவும், நமக்கு விரோதமாக குற்றஞ்செய்தவர்களை நாம் மன்னிக்க வேண்டுமென் பதையும் அறிவுறுத்தினார்.

நான்காவதாக, நாம் சோதனையிலிருந்தும் பாவத்திலிருந்தும் நீங்கும்படிக்கு தேவனுடைய உதவியைக் கோரவேண்டும் என கற்பிக்கப்படுகிறோம்.

ஐந்தாவதாக, தேவனை மகிமைப்படுத்துவதோடும், எல்லா வல்லமையும் மகிமையும் அவருடையவைகளே என அறிக்கையிடுவதோடும் இயேசு ஜெபத்தினை நிறைவு செய்கிறார்.

இந்த ஜெபம் ஒரு சுருக்கமான ஜெபமாகயிருந்தது ஆனால் இது நாம் ஜெபிக்கவேண்டிய அடிப்படை மற்றும் பொதுவான தலைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஜெபமாகும். இவைகள்

நம்முடைய இருதயங்களிலிருந்து ஊற்றப்படும் அதிகமான தனிப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தேவைகளுக்காகவும், அவர் நம்மை போஷித்து உதவிசெய்வார் என பாவங்களை அறிக்கையிட்டு ஜெபிக்கிறதாகவும் இருக்கலாம்.

இங்கே தனி ஜெபங்களும் பொது ஜெபங்களும் உண்டு *(லூக்.9:18, அப்.12:12)* நாம் நிற்கின்ற இடத்தில் ஜெபிக்கின்ற ஜெபங்களும்*(மாற்.11:25)*. நாம் முழங்காலில் நிற்கின்ற இடத்தில் ஜெபிக்கின்ற ஜெபங்களும் *(அப்9:40)* உண்டு. இரவும் பகலும் தொடர்ந்து ஜெபிக்கின்ற ஜெபங்களும் *(1தெச.3:10)*. நாம் இடைவிடாமல் ஜெபிக்கவும் அல்லது ஜெபசிந்தையோடு நாம் வாழவும் அறிவுறுத்தப்படுகிறோம் *(1தெச5:17)*.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் ஜெபிக்கிறீர்களா? ஜெபித்தினைக் குறித்து உங்களுடைய கருத்து என்ன? நீங்கள் தேவன் உங்களை நேசிக்கிறார் உங்களுடைய ஜெபத்தினைக் கேட்கிறார் என்று நம்பி விசுவாசத்துடன் ஜெபிக்கிறீர்களா?

நம்முடைய பிதாவை ஜெபத்தின் மூலம் கிட்டிச்சேரும் பாக்கியம் பெற்றுள்ள நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்! நாம் இவ்வாறு செய்து நம்முடைய ஜெபத்தின் முடிவில் எப்பேர்பட்ட வல்லமையைப் பெற்றுக்கொள்கிறோம்!

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவின் முதல் பெண் ரெயில் ஓட்டுனர் யார்?
   அ)செல்வி.சுப்ரியா ஆ)செல்வி.சுலேகாராய் இ)செல்வி.சுரேகா யாதவ்
2. அதிக ஏழுத்துக்களை கொண்ட மொழி எது?
   அ)சுமேரிய மொழி ஆ)கம்போடிய மொழி இ)தமிழ் மொழி
3. எந்த நாட்டில் கோட்டைகள் அதிகம்?
   அ)செக்கோஸ்லோவாகியா ஆ)இந்தியா இ)எகிப்து
4. ஜப்பான் நாடு எத்தனை தீவுகளைக் கொண்டது?
   அ)3,900 தீவுகள் ஆ)3.000 தீவுகள் இ)4,008 தீவுகள்
5. அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்கும் இந்தியர்களில் நீதிபதியாக பதவி ஏற்றமுதல் நபர் யார்?
   அ)ரதி தேசாய் ஆ)பி.ஏ.சங்மா இ)ஆர்.எஸ்.சர்காரியா

விடைகள்:1.செல்வி.சுரேகா யாதவ் 2.கம்போடிய மொழி 3.செக்கோஸ்லோவாகியா 4.3,900 தீவுகள் 5.ஆர்.எஸ்.சர்காரியா

### ஆன்மீக ஆலோசனை

*"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்" (ரோமர்12:9)*

பெண்கள் பகுதி

# தேவன் உங்களை உயர்த்துவார்
# God may Exalt you

J.குளோரி அர்ஜுனன்



அன்பு சகோதரிகளே, இப்புத்தாண்டில் தேவன் உங்களை உயர்த்துவார் என வாழ்த்துகிறேன். நிச்சயமாக தேவன் நம்மை உயர்த்துவார். அவருடைய ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. தேவன் நம்மை உயர்த்தும்படி நாம் என்ன செய்ய வேண்டுமென தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார் என வேதத்தின் உதவி கொண்டு பார்ப்போம்.

**கர்த்தருக்குமுன் தாழ்மைப்படுவோம்:**

ஆம். கர்த்தருக்கு முன் நம்மைத் தாழ்த்துவோம், அவருக்கு முன் பணிந்து குனிந்து முழங்காற்படியிடுவோம். இன்னும் மென்மேலும் உயர்த்தப்பட "நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்" (சங்99:5). சகோதரியே, இன்று உன்னுடைய கல்வி, உன்னுடைய பட்டம், உன்னுடைய அந்தஸ்து, உன்னுடைய செல்வம், உன்னுடைய அனைத்து ஆசீர்வாதங்களும் யாரால் வந்தது? உன்னுடைய ஞானம், உழைப்பு, இவற்றால் வந்தது என எண்ணுகிறாயோ? இல்லை. நிச்சயமாய் இல்லை. கர்த்தருக்கு முன் உன்னைத் தாழ்த்து.

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோம.8:32) என்ற வசனத்திற்கேற்ப நமக்கு ஜீவன், சுகம், பெலன், செல்வாக்கு, அந்தஸ்து என எல்லாவற்றையும் நமக்கு அருளி, இப்புத்தாண்டினையும் காணும்படி செய்திருக்கிறார். இது அவருடைய பெரிதான கிருபையல்லவா? இப்பேர்ப்பட்ட நம்முடைய கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோம். நம்முடைய சுயபெலத்தால் ஒன்றையும் சவதரிக்கமுடியாது என நினைவுகூருவோம். கர்த்தர் ஒருவனை ஆசீர்வதித்தாலொழிய ஒருவனும் ஆசீர்வதிக்கப்படான். நமக்குரியதைக் குறித்து மேட்டிமையாயிராமல் கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுவோம். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார் (1பேது.5:5). அவர் பாதபடிமுன் பணிவோம் அவரையே உயர்த்துவோம். வரும் நாட்களிலும் அவரால் உயர்த்தப்படுவோம்.

**கீழ்ப்படிந்து தம்மைத்தாமே தாழ்த்துவோம்:**

கர்த்தருக்கு முன் நாமொன்றுமில்லை என அவருக்குமுன் தாழ்மைப்படுவதோடுகூட அவருக்குக் கீழ்ப்படிந்து நம்மை நாமே தாழ்த்துவதும் அவசியமாயிருக்கிறது. ஆம், நம்முடைய ஆண்டவர், தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்தினார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் .......... அடிமையின் ரூபமெடுத்து, மனுஷசாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் **கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.....** எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத்தந்தருளினார்" *(பிலி.2:6-11)*. இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார், ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும், நானும் எப்படியிருக்கிறோம்? சற்றே வேதாகமத்தின் வெளிச்சத்திலே நம்மை நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் பிசாசின் பிள்ளைகளுக்கு முன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா? உங்களுடைய நாமங்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பது பற்றி சந்தோஷப்படுங்கள் என்று தான் நமதாண்டவர் சீஷர்களைப் பார்த்துக் கூறினாரேயன்றி பெருமைகொள்ளுங்கள் எனக் கூறவில்லை. "அவர்....... தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்..... கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்"*(பிலி.2:6-8)* என வாசிக்கிறோம். நமதாண்டவராகிய கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கக்கடவது. நமதாண்டவரே தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தம் செய்தாரென்றால் அவரைப்பின்பற்றுகிற நாம் எவ்வளவு அதிகமாகக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தம் செய்ய வேண்டும்! நம்முடைய மரணபரியந்தம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவோம் கீழ்ப்படிவதும், நம்மைத் தாழ்த்துவதும் கடினமாகயிருக்கிறதென்று சொல்வோமானால் நிச்சயமாக உயர்த்தப்படமாட்டோம். தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

**அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம்:** கிறிஸ்துவை உயர்த்தின தேவன் நம்மையும் உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம். "....... ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" *(1பேது5:6)* என வேதம் கூறுகிறது. கிறிஸ்துவர்களாகிய நமக்கு இவ்வுலக ஜீவியம் எப்போதும் சாதகமாக இருக்கும் எனக் கூறஇயலாது. சிலவேளைகளில் கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகளும், தோல்விகளும் வரலாம். சமுதாயத்தில் நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு

நம்மைக் குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். இவ்வாறு இவ்வுலகம் நம்மை குற்றப்படுத்தும்போது, இயேசுவையும் குற்றப்படுத்தியது என்பதை நினைத்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுவோம். வேதபாரகர், பிரதான ஆசாரியர் போன்றவர்கள் இயேசுவைக் குற்றப்படுத்தும் படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் பரியாசஞ்செய்தனர். "மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்"(மத்.27:42-43). ஆனால் இயேசுவோ, "..... பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார் ........" (லூக்.23:34). நம்மால் இப்படிக்கூறமுடியுமா? இவ்வாறெல்லாம் பொறுமையாக, மனத்தாழ்மையுடன் அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க முடியுமா? தேவன் நம்மைக் குறித்து கொண்டுள்ள சித்தத்தினை நிறைவேற்றும்படி அவருடைய பலத்தகைக்குள் அடங்கியிருந்தால் தான் அவர் நம்மை உயர்த்துவார். ஆம், முடிவில் என்ன நடந்தது? "..... தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, .........எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்"(பிலி.2:9-11). நமக்கு வரும் பிரச்சனைகளில் இரு 'Prestige Issue' என்னால் விட்டுக்கொடுத்து தாழ்ந்து போக முடியாது என சொல்வோமானால் மிகுந்த வேதனையடைய வேண்டியிருக்கும் நம்முடைய பிடிவாதம் ஒருபோதும் நமக்கு வெற்றியைக் கொண்டுவராது. "ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர் களாக எண்ணக்கடவீர்கள்"(பிலி.2:3) என வேதம் கூறுகிறது.

அன்பு சகோதரியே, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவைப் போல தேவனுக்குக் கீழ்ப்படிந்து, நம்மை நாமே தாழ்த்தி, தேவனுக்கு முன்பாக தாழ்மைப் பட்டு அவருடைய பலத்தகைக் குள் அடங்கியிருக்க முடியும். அப்படியிருக் கும் போது கிறிஸ்துவை தேவன் உயர்த்தியது போல நம்மையும் உயர்த்துவார். "கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுங்கள், அப்பொது அவர் உங்களை உயர்த்துவார்"(யாக்.4:10). தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக!.

**"மேன்மைக்கு முன்னானது தாழ்மை"**
**(நீதி.18:12)**

பாடம் - 10

# சபையின் ஐக்கியம்
# UNITY OF THE CHURCH

J.C.Choate

இன்றைய மத உலகம் எப்பொழுதுமில்லாத அளவுக்கு சபையின் ஐக்கியத்தில் அக்கறை காட்டுகிறது. எக்யுமெனிக்கல் என்னும் 'சபை சாரா குழு' எங்குமுள்ள மனிதர்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்துவது போன்ற பிரமையை உண்டாக்கியிருக்கிறது. இதற்குக் காரணம், உலகில் இன்று ஏகப்பட்ட மார்க்கப் பிரிவினைகள் இருப்பதால், ஒவ்வொருவரும் மிகவும் விரக்தியடைந்துள்ளனர். இருப்பினும் ஒருவருக்கொருவர் ஒத்துக்கொள்ளாத கொள்கைகளை வைத்துக்கொண்டு, மனிதர்களின் மார்க்க அமைப்புகளை ஒரு போதும் ஐக்கியத் திற்கு கொண்டு வர இயலாது. ஏதோ சில விஷயங்களில் ஒற்றுமையோ ஐக்கியமோ உண்டாவதைப் போல் இருந்தாலும், இன்னும் பிரிவினைகள் இருக்கவே செய்யும். எனவே இதற்கு பதில்தான் என்ன? இதற்குரிய பதில் வேதாகமத்திலேயே இருக்கிறது. உண்மையான ஐக்கியம் நிலை பெற வேண்டுமானால், மனிதர்கள் தங்கள் உபதேசங்களையும், கொள்கைகளை யும், (சபைப்) பெயர்களையும், (சபைப்) பிரிவுகளையும் உபதேச கோட்பாட்டு புத்தகங்களையும் விட்டு விலகி, வேதாகமத்தை எடுத்து அதை விசுவாசிக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே யோவான்17-ல் கர்த்தர் ஜெபித்த ஜெபத்திற்கேற்ற உண்மையான ஒற்றுமையைக் காணமுடியும். மனிதர் இதைச் செய்யும்போது, எல்லோரும் ஒரே காரியத்தை பேசவும், எல்லோரும் ஒரே உபதேச சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும், எல்லோரும் ஒரே (சபை) பெயரைத் தரிக்கவும், எல்லோரும் ஒன்றாக ஊழியம் செய்து, ஒரே உபதேசத்தைப் போதித்து, ஒன்றாக பரலோகம் செல்லக்கூடும். மனிதனை விடுத்து, கிறிஸ்துவை பின்பற்றும்போது ஐக்கியத்தை நிலை நாட்டுவது மிகவும் எளிது.

பிரிவினையை வசனங்கள் கண்டிக்கின்றன. பிரிவினைகளை விதைக்கிறவர்களையும், சகோதரர்களுக்குள் பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களையும் தேவன் வெறுப்பதாக வேதம் கூறுகிறது (நீதி.6:10). 1கொரி.1-ல் கொரிந்து சபை பிளவு படுவதைக் குறித்து பேசுகிறது. இப்படிப்பட்டவைகளைக்குறித்து புகழாமல், அப்போஸ்தலனாகிய பவுல், அதன் அடிப்படைக் காரணியையே அழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டான். அவன் இப்படியாக ஆரம்பித்து பேசுகிறான். "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்

வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1கொரி.1:10). பிறகு மூன்று கேள்விகளைக் கேட்டு, அவைகளில் ஒவ்வொன்றிலும் அவர்களின் தவறான தர்க்கத்தை வெளிக்காட்ட முயலுகிறான். கேள்விகள் எவையெனில், "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?" என்பதே. இவை மூன்றுக்குமே எதிர்மறையான பதிலையே அவர்கள் கொடுக்க வேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்களின் பிரிவினை நிலையின் அவலத்தை இப்படியாகச் சுட்டிக் காட்டினான்.

அதே அப்போஸ்தனாகிய பவுல், ரோமாபுரியில் இருந்த சகோதரர்களுக்கு, "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டும் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர் கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர் களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" என்றார் (ரோம.16:17,18). மேலும், "நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலகவழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின் படியும் நடந்து, தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிற தென்ன? இவையெல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்து போகுமே" என்று (கொலோ.2:20-22) கேட்கிறான்.

இன்னும் சொல்லப்போனால், மனிதனின் உபதேசங்களும், மனித கொள்கைகளும், கட்டளைகளும், வேதாகமத்திற்கப்பால் உள்ள புத்தகங்களைப் பின்பற்றுவதுமா கிய இவைகளனைத்தும் பிரிவினைகளுக்கு வழி வகுக்கின்றன. அதே வேளையில் கிறிஸ்துவை மாத்திரம் ஒருவர் பின்பற்றினால், ஐக்கியத்தை அனுபவிக்கக்கூடும். கிறிஸ்துவே, 'நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்கிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக் காவும் வேண்டிக்கொள்கிறேன்" என்று ஜெபித்தார் (யோவா.17:20,21). இயலாத ஒரு காரியத்துக்காகவா கிறிஸ்து ஜெபித்தார்? இல்லை நிச்சயமாகவே ஐக்கியத்திற்கு வழி உண்டு. எப்பொழுது? கிறிஸ்துவை நாம் பின்பற்றும்போது மனித உபதேசங்கள் நம்மை பிரிக்கும். ஆனால் வேத உபதேசமோ நம்மை இணைக்கும்.

எபே.4:1-6-ல், ஐக்கியத்திற்கான விதிமுறை கூறப்பட்டுள் ளன. அவைகளைக் கவனியுங்கள். "ஆதலால் கர்த்தர் நிமித்தம் கட்டுண்ட வனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,

மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடியபொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்". இது ஐக்கியத்திற்கான அறைகூவல் என்பதைக் கவனியுங்கள். பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொன்றிலும் 'ஒன்று' என்று வருவதையும் கவனியுங்கள். இந்த 'ஒன்று' க்கு மேல் இருந்ததென்ற கருத்துடையவர்கள் யார்?

சபையின் ஐக்கியம் என்பது, கிறிஸ்து தமது சபையைக் கட்டுவதாக சொன்னதிலே காணப்படுகிறது (மத்.16:18). ஒன்று என்று பொருள்பட கூறப்பட்ட அவருடைய ஆவிக்குரிய சரீரத்திற்கு (1கொரி.12:27) அவரே தலையாகவுமிருக்கிறார் (கொலோ.1:18). நிச்சயமாக கிறிஸ்துவுக்கு இரண்டு சரீரங்களோ, இரண்டு தலைகளோ இருப்பதாக யாரும் குற்றஞ்சாட்ட இயலாது. சபை தேவனுடைய வீடு என்றும், தேவனுடைய குடும்பம் என்றும் காட்டப்படுகிறது (1தீமோ.3:15). ஆனால் எத்தனை வீடுகள் அல்லது கும்பங்கள்? ஒன்று மட்டுமே. கிறிஸ்துவை ராஜாவாகக் கொண்ட, கிறிஸ்துவின் ராஜ்யம் என்றும் தேவனுடைய ராஜ்யம் என்றும் (சபையைக் குறித்து) வாசிக்கிறோம் (யோவா.3:3-5; கொலோ.4:11; 1தீமோ.6:15). கர்த்தர் எத்தனை ராஜ்யங்களைக் கொண்டிருக்கிறார். மேலும், அங்கே எத்தனை ராஜாக்களும் உள்ளனர்? இரண்டுமே ஒவ்வொன்று தான்.

இப்படியாக, மேலும் மேலும் கூறமுடியும். நிச்சயமாகவே வேதாகமம் நாமகரணக் கூட்டமாகிய பிரிவினையை எதிர்க்கிறது. மறுபுறத்தில், ஐக்கியத்தையும், ஒற்றுமையையும், நிறைவையும் முழுமையையும் காட்டுகிறது.

சபை என்பது, மார்க்க ரீதியான ஜனங்களில் விசுவாசம், செயல்பாடுகளுக்கப்பால் அமைவு பெற்ற ஒருமறைவான சரீரமாக வேதம் சித்தரிப்பதில்லை. ஆனால் அது சபை கிறிஸ்துவுக்குரியது என்றும், அழைக்கப்பட்டவர்களால், கிறிஸ்துவைப் பின்பற்றினவர்களால், அவருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்தவர்களால், இரட்சிக்கப்பட்டவர்களால் ஆன கூட்டத்தைக் கொண்டு அமைவு பெற்றது. கிறிஸ்துவோ அவருடைய சபையோ பிரிந்திருப்பதில்லை. பிரிந்திருப்பது என்பதும் பிரிவினையைப் பற்றிக்கொண்டிருப்பது என்பதும் கிறிஸ்து ஜெபித்த (ஒற்றுமைக்கான) ஜெபத்திற்கு எதிர்த்து நிற்பதாகும்.

## கேள்விகள்

தயவு செய்து சரியான விடைகளைத் தருக:

1. சபையின் ஐக்கியத்தைக் குறித்த வேண்டுகோள்கள் எதுவும் இன்று காணப்படுகிறதா?------------------------------------------------

2. ஐக்கியத்தில் அதிகமான அக்கறை காட்டப்படுவதன் காரணம் என்ன?------------------------------------------------------------------

3. உபதேசங்களில் ஒத்துப்போக வேண்டுவதில்லை என்ற கொள்கையில் ஐக்கியத்தை நிலைநாட்ட முடியுமா?----------------

4. ஐக்கியத்திற்கான பதில் என்ன?-------------------------------------------

5. ஐக்கியத்திற்காக மனிதர்கள் செய்ய வேண்டுவதென்ன?------------
-------------------------------------------------------------------------------

6. நாம் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபித்தது யார்?------------
-------------------------------------------------------------------------------

7. ஐக்கியத்தின் விளைவு என்ன?----------------------------------------

8. பிரிவினையை வசனம் கண்டிக்கிறதா?-------------------------------

9. கர்த்தர் யாரை வெறுக்கிறார்?-------------------------------------------

10. 1கொரிந்தியர்1:10-ஐ மனப்பாடமாக எழுதுக.-------------------------
-------------------------------------------------------------------------------

11. கொரிந்துவிலிருந்த சபையைப் பார்த்து பவுல் கேட்ட மூன்று கேள்விகள் யாவை?--------------------------------------------------------

12. எப்படிப்பட்ட ஜனங்கள் சபை ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட வேண்டும்?------------------------------------------------------------------

13. அவர்கள் யாருக்கு ஊழியம் செய்கின்றனர்?--------------------------
-------------------------------------------------------------------------------

14. நாம் அவர்களை தவிர்க்க வேண்டுமா?-------------------------------

15. கர்த்தரை வீணாக ஆராதிப்பது யார்?--------------------------------

16. கிறிஸ்து எதற்காக ஜெபித்தார்?----------------------------------------

17. இயலாத (கூடாத) ஒரு காரியத்திற்காகவா கிறிஸ்து ஜெபித்தார்?------------------------------------------------------------------

18. ஐக்கியத்திறகான விதிமுறைகளைக் குறிப்பிடுக?--------------------
-------------------------------------------------------------------------------

19. அவைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை உள்ளன?---------------------

20. கிறிஸ்து எத்தனை சபைகளை ஸ்தாபித்தார்?-------------------------

21. சபை என்பது என்ன?----------------------------------------------------

22. அதன் தலைவர் யார்?----------------------------------------------------

23. கிறிஸ்துவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரீரமோ, தலையோ உண்டா?------------------------------------------------------------------

24. கர்த்தருக்கு எத்தனை குடும்பங்கள் உள்ளன?-------------------------
-------------------------------------------------------------------------------

25. தேவனுடைய வசனம் நம்மை பிரிக்கிறதா? அல்லது ஐக்கியப்படுத்துகிறதா?------------------------------------------------

**-Selected**

## "இது எல்லாம் சரி"
## "It`s All Right"

நீ சின்னப்பிள்ளையாய் இருந்தபோது
-ஒரு குழந்தை எனது கால்களின் மேல்-
நீ கால் இடறி விழுந்தாய்,
உன்னைத் சுத்தம் செய்யவும்
உனது வாழ்க்கைப் பிரச்சனைகளைத்
தீர்க்கவும் முடிந்தது என்னால்,
**"தேனே இது எல்லாம் சரி,"**

மேலும் வயதான போது,
சில நண்பர்கள் வருத்தப்படுத்தியதினால்
அல்லது ஏமாற்றத்தினால் நீ கதறினாய்
இன்னும் கண்ணீரைத் துடைத்து
காயத்தினை ஆற்றமுடிந்தது என்னால்
கவலை கொள்ளாதே, தேனே.**"இது எல்லாம் சரி."**

வார்த்தைகள் பல வாலிப வருடங்களில்
தோற்றுப் போயிருந்தன
இருதயம் மாட்டிக்கொண்ட போது
காத்திருக்க வேண்டியிருந்தது பல வாரங்கள்
-சில நேரங்களில் பல மாதங்கள்-
உடைந்து போன கனவுகள் சரிசெய்யப்பட
மேலும் திரும்பவும் நம்பிக்கை கொள்ள,
**"தேனே இது எல்லாம் சரி,"**

இப்போது நாம் நன்கு அறிந்தவர்கள்;
நமது உலகங்கள், நமது காயங்கள், மாறியுள்ளன;
அவைகள் மிக மிக அழமானவை
மேலும மிக மிக மாட்டிக்கொண்டவை சில
நேரங்களில்
முத்தம் இல்லை நம்பிக்கையூட்டும் தட்டிக்
கொடுத்தல் இல்லை
தவறை சரி செய்யக்கூடிய வார்த்தை இல்லை.
ஓ, எனது சின்ன பிள்ளையே
உனது வட்டமான கண்களை நிரப்புகின்ற
வருத்தமான விம்மல்களை நிறுத்திவிட
விசனத்தை அற்புறப்படுத்த வாஞ்சிக்கிறேன் நான்;
திரும்பவும் வார்த்தைகள் கிரியைசெய்யும்வரை
இக்காலம் திரும்பிவிட வாஞ்சிக்கிறேன் நான்;
கவலை கொள்ளாதே, தேனே,**"இது எல்லாம் சரி"**
ஆனால் இவ்வாறெல்லாம் தேவனால் செய்யக்கூடும்.

**-Betty Burton Choate**

# ஆசை

1. *ஏவாளுக்கு விலக்கப்பட்ட கனியைப் புசிக்க ஆசை - (ஆதி.3:6)*
2. *லோத்தின் மனைவிக்கு திரும்பிப் பார்க்கும் ஆசை - (ஆதி.19:26)*
3. *ஏசாவுக்கு பயத்தங்கூழ் மீது ஆசை - (ஆதி.25:29,30)*
4. *போத்திபார் மனைவிக்கு யோசேப்பின் மீது ஆசை - (ஆதி.39:7)*
5. *இஸ்ரவேலருக்கு கீரை, வெள்ளறிக் காய்போன்றவற்றின் மீது ஆசை - (எண்.11:5)*
6. *ஆகானுக்கு கொள்ளைப் பொருளின் மீது ஆசை - (யோசு.7:20,21)*
7. *சிம்சோனுக்கு தெலீளாள் மீது ஆசை - (நியா.16:4)*
8. *சவுலுக்குத் தாவீதைக் கொல்லும் ஆசை - (1சாமு.19:10)*
9. *தாவீதுக்கு பத்சேபாள் மீது ஆசை - (2சாமு.11:2-4)*
10. *சாலொமோனுக்கு அந்நிய ஸ்திரீகள் மீது ஆசை - (1இராஜா.11:2)*

**ஆனால்**

*பெரும்பாடுள்ள ஸ்திரீக்கோ இயேசுவின் வஸ்திரத்தைத் தொட ஆசை - (மத்.9:20-22)*

*P.அலிஸ்மேரியம்மாள்*

## ஜெபியுங்கள்

- தேவன் புதுவருடத்தைக் கொடுத்ததற்காக....
- சுனாமி தாக்குதலால் மரித்தவர்களுடைய குடும்பங்களுக்காக....
- இம்மாதம் நடைபெற விருக்கும் பதினேழாவது வாசகர் கருத்தரங்கிற்காக....

# சந்திப்போம்! சிந்திப்போம்!

**உரையாடல் - 29** **D.எபிநேசர்**

**யோனத்தான்:** புத்தாண்டு வாழ்த்துக்கள் தாவீது!

**தாவீது:** O, Thank you. Same to you. உனக்கு மட்டுமல்ல, நமது வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். தேவன் தாமே 'The Word of Christ' பத்திரிக்கையின் வாயிலாக தமது வார்த்தைகளைக் கொண்டு, அநேக ஆத்துமாக்களை மீட்டுக்கொள்வாராக.

**யோனத்தான்:** இந்தப் புதிய வருஷம் எப்படி இருக்கும் தாவீது?

**தாவீது:** எனக்கு இந்த ஜோசியமெல்லாம் தெரியாதுப்பா! ஆனா தேவன் இப்பொழுது நல்ல மாற்றங்களைக் கொடுத்துக்கிட்டிருக்காரு. பலர் இப்ப உண்மையான கடவுளையும் உண்மையான சத்தியத்தையும் அரிய ஆர்வமா இருக்காங்க. போலியானவங்களை தேவன் அடையாளம் காட்ட ஆரம்பிச்சிருக்காரு. எனவே, மக்கள் விழிப்புணர்வோடு இருக்கற இந்த சமயத்துல சுவிசேஷத்தை நாம் தீவிரமா அறிவிக்கணும். இந்தப் புதிய வருஷத்துல தேவன் நல்ல அறுவடையை கொடுப்பார்னு நான் நினைக்கிறேன்.

**யோனத்தான்:** அப்படியே நடக்கட்டும் தாவீது! அப்புறம், போன தடவை நான் கேட்ட கேள்விக்கு பதில் இன்னும் சொல்லலியே!

**தாவீது:** இந்த வசனத்தை வாசி **ஆமோஸ்5:23** தேவன் இசைக்கருவிகளை தாம் விரும்பவில்லை என நேரடியாகச் சொல்வதை அறியலாம்.


**யோனத்தான்:** "உன் பாட்டுக்களின் (கின்னாரங்களின்) இரைச்சலை என்னைவிட்டு அகற்று. உன் வீணைகளின் ஓசையைக் கேட்கமாட்டேன்"

**தாவீது:** இன்னும் ஆமோஸ்6:5-7 "தம்புரை வாசித்துப்பாடி, தாவீதைப்போல கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டு பண்ணி..... இன்னும் சில தவறுகளைச் செய்கிறவர்களின் விருந்து கொண்டாடல் நின்று போகும்" என்றும் கர்த்தர் முன்னறிவிக்கிறார்.

**யோனத்தான்:** இதிலிருந்து இசைக்கருவிகளை உபயோகித்து ஆராதனை செய்வதில் தேவனுக்குத் துளியும் விருப்பமில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது தாவீது.

**தாவீது:** இதை மற்றவர்களும் புரிந்து கொண்டால் மிகவும் நலமாக இருக்கும் யோனத்தான்.

**(மீண்டும் சந்திப்போம்)**




# ௧௨ சந்தோஷத்தின் விதிகள்
# 12 Rules of Happiness

1. **எளிமையான வாழ்க்கை.** ஒவ்வொரு நாளும் பல காரியங்களைத் திட்டமிடாதே. உன்னுடைய வாழ்க்கைப் பாங்கில் மிதமாக நிதானமாக இரு.
2. **நீ சம்பாதிப்பதை விட குறைவாக செலவுசெய்.** இது செய்வதற்குக் கடினமாகயிருக்கலாம், ஆனால் இது உன் மனதிருப்தியிலும் மன அமைதியிலும் பெரிய பிரதிபலன்களை கொடுக்கிறது.
3. **உருப்படியானவற்றை நினை.** உன்னுடைய மனதில் பயனுள்ள நினைவுகளை சேமித்துவை. ஒருவன் தன் இருதயத்தில் நினைக்கிறபடியே, அவன் இருப்பான்.
4. **இணக்கமுள்ள விருப்பத்தை வளர்த்துக்கொள்.** உன்னுடைய சுயவழியை விரும்புகின்ற மனோபாவத்தைத் தடுத்து விடு. மற்றொருவனுடைய கருத்தினை அறிய முயற்சிசெய்.
5. **நன்றியுள்ளவனாயிரு.** உனக்குக் கிடைத்துள்ள அனைத்து ஆசீர்வாதங்களுக்காக நன்றிசெலுத்தும் ஜெபத்துடன் ஒவ்வொரு நாளையும் துவக்கு. நீ நன்றியுள்ளவன் என்பதை தேவன் அறியட்டும்.
6. **உன்னுடைய மனநிலைகளை ஆண்டுகொள்.** உன்னுடைய மனோநிலை மற்றவர்களோடு சமாதானத்தடன் வாழ்வதில் மிக முக்கியமானது.
7. **உதாரத்துவமாய் கொடு.** உன்னுடைய நேரம், தாலந்துகள், தனிப்பட்ட குணம், பணம் போன்றவற்றினுடைய புத்தியுள்ள அர்ப்பணம் பெரிய மகிழ்ச்சியைக் கொண்டுவரும்.
8. **சரியான உள்ளெண்ணத்துடன் வேலை செய்.** தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் அன்பு செலுத்துவதில் வளருவதை நாடு, உன் வாழ்வில் முதலாவது தேவனுடைய சித்தத்தினைத் தேடு.
9. **மற்றவர்களிடத்தில் அக்கறையுள்ளவனாயிரு.** மற்றவர்களுக்குச் செய்கிற நம் சேவையில், தானாய் கொடுக்கும் வாழ்வில் இன்னொரு பொருளை உற்பத்திசெய்வதைப் போன்ற சந்தோஷத்தினை நாம் அறுவடை செய்கிறோம்.
10. **இன்று அதிகமானவற்றை உருவாக்கு.** ஞானமாய் இந்நாளை பயன் படுத்து அப்போது வருத்தமின்றி திரும்பிப் பார்ப்பாய்.
11. **பொழுது போக்கிற்காக நேரத்தை ஒதுக்கு.** ஒய்வு நேரத்தை விருப்பத்துடன் செலவழித்தால் கடினமான சூழ்நிலையிலிருந்து தளர்வினையும் பொழுது போக்கினையும் உனக்குக் கொண்டுவரும்.
12. **தேவனிடத்தில் நெருக்கமாக நிலைத்திரு.** நிலையான சந்தோஷம் தொடர்ச்சியான ஆவிக்குரிய போஷாக்கினைச் சார்ந்துள்ளது. தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினால், நாம் அவருடைய நிலையான அன்பு மற்றும் பராமரிப்பின் வாக்குத்தத்தினைப் பெற்றிருக்கிறோம்.




# அத்திப்பழக்கூடை

**வேத பகுதி: எரேமியா24:1-10**



பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதாவின் ராஜாவையும், யூதாவின் பிரபுக்களையும், எருசலேமிலுள்ள தச்சரையும் கொல்லரையும் பாபிலோனுக்கு சிறைப்பிடித்துக் கொண்டு போனான். அப்பொழுது கர்த்தர் எரேமியாவுக்கு அவருடைய ஆலயத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிற இரண்டு அத்திப்பழக் கூடைகளைக் காண்பித்தார். அதில் ஒரு கூடையில் முதல் தரமான அத்திப்பழங்களும் மற்றொன்றில் மிகவும் கெட்ட அத்திப்பழங்களும் இருந்தது. கர்த்தர் எரேமியாவை நோக்கி: நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார். அவர் இரண்டு கூடையில் அத்திப்பழங்களைக் காண்கிறேன் என்றான்.

நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன். நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன். மேலும் நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைத்தார்.

யூதாவிலே மீதமுள்ள ஜனங்களை புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களுக்கு ஒப்பிடுகிறார். இவர்களை பாபிலோன் ராஜா யோயாக்கீனின் சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை ராஜாவாக்கி அவனிடம் விட்டுவைத்தான். எருசலேமையும் யூதாவையும் கர்த்தர் தம்முடைய சமூகத்தைவிட்டு அகற்றித் தீருமளவும் அவைகளின் மேலுள்ள கோபத்தினால் இப்படி நடந்தது. மேலும் அவர்களை பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், சாபமாகவும் வைத்து அவர்களை இராதபடிக்கு பட்டயத்தையும் பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிறைப்பட்டுப்போனவர்கள் கர்த்தருக்காக வைராக்கிய மானவர்கள். ஆகையால் அவர்களை விடுவிப்பேன் என்றார். அவர்களை நல்ல அத்திப்பபழங்களுக்கு ஒப்பிட்டார். பாபிலோன் ராஜாவுக்கு பயந்துபோய் அவனை சேவித்தவர்களை கெட்ட அத்திப் பழங்களுக்கு ஒப்பிட்டார். நாமும் இந்த மக்களைப்போலிராதபடி நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிடப்பட்ட மக்களைப்போலிருப் போம். அவர்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரை சேவிக்க திரும்புவார்கள் என்று கர்த்தர் சொன்னபடி நாமும் முழு இருதயத்தோடும் அவரையே சேவிப்போம்.

**மனப்பாட வசனம்:**
"கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (எரேமியா17:7)

## வேத அறிவுப்போட்டி எண் 52 -ல் வெற்றி பெற்றவர்கள்


| | | | |
|---|---|---|---|
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு | X.எஸ்தர்சேகர் | -பல்லடம் |
| V.கோவலன் | -மதுரை | P.K.கந்தசாமி | -கீரனூர் |
| Mrs.வனிதாசாமுவேல் | -மதுரை | S.லெட்சுமி தேவி | -சென்னை |
| G.செபாஸ்டியன் | -மதுரை | M.உமா | -க. பட்டி |
| S.தண்டபாணி | -சிலுவத்தூர் | N.கமலவேணி | -சென்னை |
| G.கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் | S.நித்தியா | -கங்கானிமேடு |
| K.மோகன் | -கொ.பாளை | K.சண்முகம் | -பரமத்தி |
| A.ஆனந்த் | -மதுரை | R.சாமுவேல் | -ஊதியூர் |
| G.மெர்சிரூபி | -கொடுவாய் | E.டென்சிங்மனோகர் | -மதுரை |
| S.ஜெயராணி | -செ.பாளை | D.ரூத்மேரி | -கங்கானிமேடு |
| R.பிளசன் | -கன்னியாகுமரி | R.பானுமதி | -நல்லிகோவில் |
| B.ஜெயராணி | -கன்னியாகுமரி | Mrs.மரியாள் | -செ.பாளை |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | G.P.ஏசையன்ராஜ் | -கோபி |
| D.ஏசுதாஸ் | -சித்தூர்(A.P) | D.பவுல் | -செ.பாளை |
| D.எஸ்தர் இவாஞ்சலின் | -முட்டைக்காடு | T.வேலுச்சாமி | -ஜெ.பாளை |
| V.P. கில்டாமேரி | -கல்லா பொறை | N.தங்கவேல் | -ஜெ.பாளை |
| S.ஆனந்தராஜ் | -ஈரோடு | A.ராபர்ட் கிளைவ் | -சில்லாங் |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | A.பென்ஷன் பவுல் | -சில்லாங் |
| V.ரத்னா | -எம். ஜி. பாளை | R.சுவாதி | -ஈரோடு |
| A.சேவியர்மேரி | -மதுரை | | |

## வேத அறிவுப்போட்டி எண் 52 -ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. அப்சலோம் | -2சாமு.14:26 | 6. விலகு | -தீத்.3:10 |
| 2. கல்லறையை | -மத்.27:64 | 7. சுவிசேஷமாய் | -சங்.96:2 |
| 3. யோபு | -யோபு10:9 | 8. பவுல், பிலேமோனுக்கு | -பிலி.18 |
| 4. நெகேமியா | -நெகே.6:11 | 9. அரண், கலக்கம் | -நீதி.10:29 |
| 5. கிறிஸ்து | -அப்.18:8 | 10. இயேசுகிறிஸ்து | -எபி.10:14 |

# இது இந்த வருஷமும் இருக்கட்டும்
## Let it alone this year also

**S.பிச்சைமுத்து**



*கிறிஸ்துவின் வசன வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் நெஞ்சம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களை இயேசுவின் நாமத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

***செய்தியின் வசனப்பகுதி:*** *லூக்கா13:6-9 இந்த வசனங்கள் முத்துக்களாகவும் இரத்தினங்களாகவும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாகவும் உள்ளது.*

*இந்த உவமையின் ஆவிக்குரிய கருத்தாவது: இயேசுகிறிஸ்து இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு வந்தார் (மத்.10:6). மூன்று வருஷம் ஊழியம் செய்து தேவனுடைய சித்தத்தை பிரசங்கித்தார் (யோவா.7:16,17). ஆனால் அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவா.1:11).*

*இந்த நிலையில்தான் நமதாண்டவர் பிதாவை ஏஜமானாகவும் இஸ்ரவேல் ஜனங்களை அந்த எஜமானின் தோட்டத்திலுள்ள ஒரு அத்தி மரத்தைப்போலவும், தன்னை தோட்டக்காரராகவும் உதாரணப்படுத்தி அவர்கள் மனந்திரும்பி கனிகளைத் தரவில்லையே என்ற ஆதங்கத்தோடு இஸ்ரவேலர்களாகிய அவர்களை வெட்டிப்போடும்படி எஜமான் சொல்கிறார். நமதாண்டவர் பிதாவிடம் பரிந்து பேசி "ஐயா இது இந்த வருஷமும் இருக்கட்டும்" இதனை சற்று சீர்படுத்திப் பார்ப்போம் என்கிறார். இந்த உவமையின் மூலம் தேவன் நமக்குத் தரும் ஆலோசனைகளைப் பார்ப்போம்.*

***1.கனிகளை எதிர்பார்க்கும் தேவன்: ஏசாயா5:1-4***

*இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கி 40 வருட வனாந்தரத்தில் அற்புதங்களைக் கொண்டு வழிநடத்தி பாலும் தேனும் ஓடுகிற தேசத்தைக் கொடுத்த பரலோகத்தின் தேவனுக்கு அவர்கள் வேதனைப்படக்கூடிய கசப்பான கனிகளையே தந்தனர்.*

*பிரியமானவர்களே, ஒருநாள் பிறப்பதை நீ அறியாயே (நீதி.27:1). மனிதனின் சுவாசத்தை தம் கரங்களில் வைத்திருக்கிறார் (தானி.5:23). என் காலங்கள் உமது கரத்தில் இருக்கிறது (சங்.31:15). தேவனுடைய வசனங்கள் இப்படியிருக்க முழுமையாக 365 நாட்களும் நம்மை ஒரு சேதமும் அணுகாமல் பாதுகாத்த அந்த தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்து அவருக்கு நன்றிசெலுத்த வேண்டாமா? அவர் நம்மிடம் கனிகளை எதிர்பார்ப்பது தவறா? இல்லை என்றால், புது வருடத்தில் கனி கொடுங்கள்.*

**2. மரமானது அதின் கனிகளால் அறியப்படும்: மத்தேயு7:17-19**

அந்தந்த மரங்கள் தரும் கனிகளை வைத்து அது இன்னவிதமான மரம் என நாம் அறிகின்றோம். நாம் நல்ல மரம் என்றால் நல்லகனிகளையே கொடுப்போம். ஆவியின் கனியோ 1. அன்பு 2. சந்தோஷம் 3. சமாதானம் 4. நீடிய பொறுமை 5. தயவு 6. நற்குணம் 7. விசுவாசம் 8. சாந்தம் 9. இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை (கலா.5:22-23). ஆம் பிரியமானவர்களே இந்த கனிகளை நம்மிடம் அவர் எதிர்பார்க்கிறார். இது நம்மால் நிச்சயம் முடியக்கூடியது தான். மேலும் உலகில் மிகச்சிறந்தவர்கள் கிறிஸ்தவர்கள்தான். நிச்சயம் இதை நாம் கைக்கொண்டு தேவனைப்பிரியப்படுத்த முடியும். அப்படிச் செய்தால் நாம் அவரிடம் அன்பு கூருகிறோம் என்று பொருள். "என்னிடத்தில் அன்பு கூருகிறவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" (1யோவா.5:3; யோவா.14:23). எங்கே சகோதரரே முடிகிறது! சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது என்கிற கதையாக ஒன்றைக் கைக்கொள்ள முயன்றால் இன்னொன்றை கைக்கொள்ள முடியவில்லை என்று நீங்கள் புலம்புவது காதில் விழுகிறது. அதற்கொரு நிவாரணமும் இருக்கிறது.

**A. கிறிஸ்துவை மாதிரியாக வையுங்கள்:**

உங்கள் கிறிஸ்துவ வாழ்வின் முன்மாதிரியாக கிறிஸ்துவை வையுங்கள். அவரோடு பிதா எப்பொழும் உடன் இருந்தார் (எபி.12:1; 5:8,9). கிறிஸ்து உலகத்தை ஜெயித்தார் என்றால் நம்மாலும் உலகத்தை ஜெயிக்க முடியும் நாம் ஜெயிக்க பிறந்தவர்கள் (யோவா.16:31). தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் (1யோவா.5:4). அவர்கள் தேவனாலே பிறந்தவர்கள். வெற்றி எப்பொதும் நம்மை தேடிவராது நாம்தான் வெற்றியைத் தேடிச் செல்லவேண்டும். அதுபோல உங்கள் கண்ணும் கருத்தும், காதுகளும் வேதாகமத்தை மட்டும் பார்த்து, கிறிஸ்துவின் சத்தத்தை மட்டுமே கேட்டு (மத்.17:5; 2தீமோ.3:16,17) அவர் சொல்லியபடி (யோவா.3:3-5) புதிய பிறப்பாகிய ஞானஸ்நானத்தைப் பெற்றீர்கள் என்றால் அவர் உங்களை ஏதோ ஒரு சபையில் அல்ல அவர் ரத்தம் சிந்தி சம்பாதித்த அவரது நாமம் தரித்த கிறிஸ்துவின் சபையிலே சேர்ப்பார் (அப்.20:28; 2:47). அப்பொழுது பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் உங்கள் உள்ளத்தில் வாசமாயிருப்பார்கள். ஆவிக்குரிய சகல வெற்றிகளையும் நீங்கள் அடைய முடியும்.

**B. கிறிஸ்து கொத்தி எருப்போடுகிறார்: வெளி.3:19; எபி.12:6,7**

நீங்கள் நல்லதொரு தேவபிள்ளையாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் மேலும் வளரும்படி கொத்தி எருப்போடுவார்.

அன்பிற்குரியவர்களே இந்த 2005-வது ஆண்டை தேவன் நமக்குக் கிருபையாய் தந்திருக்கிறார். கடந்து போனதெல்லாம் போகட்டும். இனிமேலாவது நாம் நம்மை மாற்றிக்கொள்வோம்.

# இரட்சிப்பு என்று ஒன்று உண்டா?
# Is there the salvtion?

**G.தானியேல்**

இன்று உலகில் அநேகர் குறிப்பாக படித்தவர்கள் மத்தியில் கேட்கப்படுகின்ற ஒரு கேள்வி உண்மையாகவே இரட்சிப்பு என்று ஒன்று உண்டா? என்பதாகும். ஆங்கிலத்தில் Redemption - மீட்பு Salvation - இரட்சிப்பு, Forgiveness of sin - பாவ மன்னிப்பு என்ற வார்த்தைகள் இரட்சிப்பைக் குறிக்கின்ற வெவ்வேறு வார்த்தைகள். பாவ மன்னிப்பைக் குறித்து அநேக போதனைகள் உலகில் உண்டு. எல்லா மதங்களும், மார்க்கங்களும் தீமையை விட்டு மனந்திருந்தி நீதியான வழியில் வாழவேண்டுமென்று போதிக்கின்றன. இதிலிருந்து வாழ்க்கையில் நீதியும், அநீதியும் உண்டு என்பது நன்கு தெரிகிறது. இந்த அநீதியிலிருந்து, அதாவது பாவத்திலிருந்து விடுவிக்கப்படுவதுதான் இரட்சிப்பு.

**யார் மனிதனை அவனுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கக்கூடும்?**

இன்று உலகில் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் அபாயத்திலிருந்து யார் நாட்டைக் காப்பாற்ற முடியும்? என்ற கேள்வி எழும்போது ஒரு குறிப்பிட்ட தலைவரால் தான் முடியும் என்று பெரும்பான்மை மக்கள் சொல்லுவதைக் கேட்கிறோம். அதுபோலவே மனுக்குலத்தை பாவத்திலிருந்து இரட்சிக்க கடவுளின் திட்டத்தினால் மட்டுமே முடியும். கடவுள் மனிதனையும் மனுஷியையும் உண்டாக்கி அவர்களுக்கு ஆதாம், ஏவாள் என்று பெயரிட்டு ஏதேன் என்னும் தோட்டத்தில் சகல ஆசீர்வாதங்களுடன் வைத்தார். ஆனால் இருவரும் சாத்தானின் வஞ்சனையால் விலக்கப்பட்ட கனியைப் புசித்தபோது பாவம் முதலாவது மனுக்குலத்திற்குள் பிரவேசிக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் ஏதாவது ஒரு பாவம் அவனை தேவனிடமிருந்து பிரித்து உலக அநீதியில் கொண்டுபோய் விடுகின்றது (ரோம.3:23).

கடவுள் இந்த மனுக்குலத்தை முற்றிலும் இரட்சிக்க சித்தங்கொண்டு தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்தப் பூவுலகுக்கு அனுப்பினார். வேதப் புத்தகத்திலே இயேசு என்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்று மத்தேயு1:21-ல் சொல்லப்பட்டுள்ளது. மேலும் கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்ததன் நோக்கம்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது என்று 1தீமோத்தேயு1:15-ல் பவுலடியார் தெளிவாகக் குறிப்பிடுகிறார். ஆக எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் (கடவுள்) சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று 1தீமோத்தேயு2:4-ல் குறிப்பிடுகின்றார். இவைகளை கூர்ந்து நோக்குங்கால் தேவன் மனுக்குலத்தின் மீது அளவற்ற அன்பு வைத்திருப்பதையும், அவர்களைச் சகல பாவத்தினின்றும் மீட்டு மகிழ்ச்சியாக வாழச் செய்ய சித்தமுள்ளவராயிருப்பதையும் அதன் பொருட்டே தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் எல்லோருடைய பாவங்களையும் சுமந்து தீர்த்து, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே மரணத்தை வென்று உயிர்த்தெழச் செய்தார் என்பதையும் தெளிவாக அறிய முடியும்.

இந்த மாபெரும் உண்மைகள் நிச்சமாகவே இரட்சிப்பு உண்டென்பதை பறை சாற்றுவதை ஐயமற உணர முடியும். இந்த இரட்சிப்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காண்போம்.

***1. முதலாவது இரட்சிப்பைக் குறித்த உண்மைகளைத் தெளிவாகக் கேட்டு புரிந்து விசுவாசிக்க வேண்டும்.***

"விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர்10:17)

***விசுவாசம் என்றால் என்ன?***

நீங்கள் கடவுளிலும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவானவரிலும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வேதவாக்கியங்களிலும் நம்பிக்கைவைத்து அதன்படி செயல் படுவதே விசுவாசம். பின்வரும் வேத வாக்கியங்கள் இதை நமக்குத் தெளிவுபடுத்தும்.

1. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபிரெயர்11:6).

2. ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் (யோவான்8:24).

3. ஆனால் விசுவாசம் மட்டுமே உங்களை இரட்சித்து நீதிமானாக்கப் போதுமானதல்ல என்ற உண்மையை யாக்கோபு2:24 -ல் காண்கிறோம்.

4. அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசமே இரட்சிக்கும் என்ற சத்தியத்தை கலாத்தியர்5:6-ல் வாசிக்கிறோம். தேவனுக்கேற்ற துக்கம் உங்களை பாவத்திலிருந்து மனந்திருந்தி வாழ வழி நடத்த வேண்டும். தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது (2கொரிந்தியர்7:10).

5. நாம் விசுவாசித்து மனந்திருந்தியதற்குப் பின்பு இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும். பின்வரும் வேத வாக்கியங்கள் இதைத் தெளிவாக்குகின்றன. நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்பு உண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர்10:10).

6. இரட்சிக்கப்படும்படியாக கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறவேண்டும்.

அ) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்.16:16).

ஆ) இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் (அப்22:16).

இரட்சிக்கப்படுவதற்கு மேற்சொல்லப்பட்டிருக்கும் வேத வாக்கியங்களைப் படித்து விசுவாசித்து மனப்பூர்வமாக இவைகளின்படி செயல்பட்டால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் இதில் நாம் எதையாவது முன்னுக்குப் பின் முரணாகச் செய்வது வேதத்துக்கு மாறுபடுமாதலால் இரட்சிக்கப்பட முடியாது. ஆகவே நாம் சரியாக வேதத்தின் போதனைகளின்படி செய்ய கவனமாயிருப்போம்.

இந்தப் பிரகாரம் இரட்சிக்கப்பட்டபோதே தேவன் வாக்களித்த பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்கிறோம். நீங்கள் மனந்திரும்பி

ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்.2:38).

நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு ஒவ்வொரு நாளும் புதிய ஏற்பாட்டின் ஆரோக்கியமான போதனைகளின்படி மட்டுமே வாழ்ந்தால் இம்மையில் தேவசமாதானம், சந்தோஷம், ஆசீர்வாதங்கள் மறுமையில் நித்திய ஜீவன் கிடைப்பது உறுதியே.

**பின்வரும் வேத வார்த்தைகளை ஆழ்ந்து நோக்குக:**

1. மரண பரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை தருவேன் (வெளி.2:10).

2. ஏனெனில் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி நாம் அவ பக்தியையும், உலக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி (தீத்து2:11,12).

3. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும்,அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2பேது.3:18).

இப்பேருண்மைகளை வாசிக்கும் அன்பரே உலகில் நிலையற்ற அநேகத்தின் பேரில் மனிதன் தன் மனதைச் செலுத்தி ஆராய்ந்து, முடிவில் சமாதானமின்றி இருப்பதை கேட்கிறோம், பார்க்கிறோம், படிக்கிறோம். பாவத்தினின்று எப்போது இரட்சிக்கப்படுவது சிலர் எல்லாம் முடிந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என்றிருப்பார். அப்படி இருக்கலாகாது. இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் (2கொரிந்தியர்6:2). தீயினும் கொடிய பாவத்தினின்று இரட்சிக்கப்பட இன்றே நல்ல தீர்மானம் செய்வீராக.

## பேசும் வேதாகமம் : 2

1. **இயேசுவினுடைய கற்பனை எது? - நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது - (யோவா.15:12).**
2. **பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் எதை நிறைவேற்றுகிறான்? - நியாயப்பிரமாணத்தை - (ரோம.13:8).**
3. **ஆவிக்கென்று விதைக்கிறவன் எதை அறுப்பான்? - ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் - (கலா.6:8).**
4. **நாம் எதற்காக கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்? - நற்கிரியைகளைச் செய்கிறதற்கு - (எபே.2:10).**
5. **தேவன் நம்மை எதற்கு அழைத்திருக்கிறார்? - பரிசுத்தத்திற்கே - (1தெச.4:7).**
6. **எது அற்ப பிரயோஜனமுள்ளது? - சரீரமுயற்சி - (1தீமோ.4:8).**
7. **அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி உண்டா? - ஒன்றுமில்லை - (எபி.4:13).**
8. **தேவனை யாராவது கண்டதுன்டா? - தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை - (1யோவா.4:12)**
9. **உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? - உன் வலது கை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது - (மத்.6:3)**
10. **என்னைத் (இயேசுவைத்) தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை எது நியாயந்தீர்க்கும்? - நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் - (யோவா.12:48).**


## வேத அறிவுப் போட்டி எண்.53

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில்* ***இம்மாதம் 25-தேதிக்குள்*** *எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. நம்முடைய குடியிருப்போ எங்கேயிருக்கிறது?
2. எரேமியா தீர்க்கதரிசியை அடித்த கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக் காரன் யார்?
3. என் ஆயுசுநாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுள்ளதுமாயிருக்கிறது என்று யார் யாரிடம் சொல்லுவது?
4. சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட உடன் படிக்கை எது?
5. கடல்களிலுள்ள சம்பூரணத்தையும் மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களையும் அநுபவிப்பார்கள் என்று ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் எவர்கள்?
6. உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்துவான் என்று யார் சொன்னது?
7. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் எவைகளைத் தெரிந்து கொண்டார்?
8. மயிருள்ள ஒரு தோலைப் போட்டு இரண்டு முறை தேவனிடம் சோதனை செய்தவன் யார்?
9. வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் எப்படியிருக்கும்?
10. நீங்கள் என்னிடத்தில் (கிறிஸ்துவினிடத்தில்) அன்பாயிருந்தால் எதைக் கைக்கொள்ளுங்கள் என்றார்?

### நடப்புச் செய்திகள்



- இந்தோனேசியாவில் சுமத்திராதீவு அருகே ஏற்பட்ட 'சுனாமி' பேரழிவை ஏற்படுத்தியது.
- சுனாமி அலைபோல் தொற்று நோய்கள் பலி வாங்கும் அபாயம். உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை.
- சுனாமி கூட்டமைப்பில் இந்தியா முறைப்படி சேர்ந்தது.
- இது ஐந்தாவது மிக்பெரிய நிலநடுக்கம் அமெரிக்க புவியியல் மையம் தகவல்.
- புத்தாண்டு தினத்தை எல்லோரும் துக்கத்துடன் அனுசரித்தனர்.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: B.Arjunan.


Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Jan. 2005.



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க**
**அன்புடன் அழைக்கிறோம்.**

## கிறிஸ்துவின் சபை

**7.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202**
**திண்டுக்கல் மாவட்டம்.**
**போன்: 04543-263278 செல்: 9443558041**
E-mail:thewordofchrist@sansarnet.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்
**The Master Course**
தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.30/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்




**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box.5, BATLAGUNDU - 624 202
S.INDIA

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா -ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202
S. India